RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt22459

OPEN ACCESS

# தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்களில் கதை மரபுகள்

பா. மேகலா [அ, *], கு. சிவப்பிரகாசம் [அ]

[அ] தமிழ்த்துறை, அரசு கலைக்கல்லூரி, தருமபுரி-636705, தமிழ்நாடு, இந்தியா

# Story Traditions in Tamil Classical Literature

**B. Megala [a, *], K. Sivaprakasam [b]**

[a] Department of Tamil, Government Arts College, Dharmapuri-636705, Tamil Nadu, India

* Corresponding Author: megalab@gmail.com

Received: 24-06-2022
Revised: 27-09-2022
Accepted: 10-10-2022
Published: 19-10-2022

Check for updates

**ABSTRACT**

Depending on the prosperity of the literature that originated in a language, the language can be identified as Classical. On that basis, these are considered to be a solid of the classical literature, such as stories, epitomes, illustrations, inner parables and stories that are considered prosperous in Tamil classical literature. We symbolize these as story traditions. On this basis, the purpose of this article is to reveal the traditions of the story of the Avvaiyar songs.

**Keywords:** Avvaiyar songs, Classical literature, Tamil literature, Traditions

## முன்னுரை

தகடூர் தந்த தமிழ்ச் செவ்வியல் இலக்கியப் பாடல்களில் கூற்றுகளின் அடிப்படையில் இடம் பெற்றிருக்கும் அகத்தினைப் பாடல்களும், திணை அடிப்படையில் இடம்பெற்றிருக்கும் புறப்பாடல்களும் இங்கு வகைப்படுத்தப்பட்டுள்ளன. இப்பாடல்களின் மூலம் கதை மரபுகள் என்னும் உத்திமுறைதான் தமிழ்ச் செவ்வியல் இலக்கியத்தின் வளமை என்னும் கருதுக்கோளின் அடிப்படையில் இக்கட்டுரை அமைந்துள்ளது.

## கூற்றுகள் வழி கதைமரபு

"சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறார்" என்னும் தொல்காப்பியத்தின் இலக்கணத்தின்படி தனி ஒருவனின் பெயரை அடையாளப்படுத்தாமல் கூற்றுகளின் வழியாக செய்திகளைச் சொல்லும் மரபு அகத்திணைக் கொள்கையாகும். தலைவன், தலைவி, தோழி, பாங்கன், செவிலி, நற்றாய், பரத்தை, கண்டோர் ஆகிய கூற்றுகளின் வழியாக தான்சொல்ல நினைத்த அகமன உணர்வுகளைக் கதையாகச் சொல்லும் நுணுக்கம் சங்க இலக்கிய அகத்திணைகளில் காணமுடிகின்றது. இந்த அடிப்படையில் தகடூர் தந்த தமிழ்ச் செவ்வியல் இலக்கியப் பாடல்களில் கூற்றுகளின் அடிப்படையில் இடம் பெற்றிருக்கும் அகத்தினைப் பாடல்களும், திணை அடிப்படையில் இடம்பெற்றிருக்கும் புறப்பாடல்களும் இங்கு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

அட்டவணை - 1 கதைமரபின் சிறப்பம்சம்

| கூற்றுகள் | குறுந்தொகை |
|---|---|
| தலைவன் | 29, 99 |
| தலைவி | 28, 39, 49, 91, 102, 158, 183, 200, 388. |
| தோழி | 23. |
| செவிலி | 15. |
| பரத்தை | 80, 364. |
| கண்டோர் | -- |

## உவமை

உவமை என்பது அறிந்த ஒன்றைக் கொண்டு அறியாத ஒன்றை இனம் காண்பதாகும். இது நான்கு வகைப்படும் என்று தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார் (Balasundaram, 2012).

வினைப்பயன் மெய்உரு என்ற நான்கே

வகைபெற வந்த உவமைத் தோற்றம் - தொல்காப்பியம்

வினை - புலிபோலப் பாய்ந்தான்

பயன் - மாரியன்ன வண்கை

மெய் - துடிஇடை

வண்ணம் - பொன்மேனி என்று வகைப்படுத்தப்படுகிறது.

பண்டையத் தமிழர்கள் இயற்கையோடு இணைந்த வாழ்வை மேற்கொண்டனர். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று நிலத்தை வகைப்படுத்தி அங்கு இருக்கும் மனிதர்களுக்கு தேவையான பொருட்களும், வாழும் பறவைகளையும், விலங்கினங்களையும், மரம், செடி கொடிகளையும், இணைத்து ஒவ்வொரு திணைகளுக்கும் கருப்பொருளை உருவாக்கி நிலைப்படுத்தி அதனோடு தொடர்புடைய உரிப்பொருளை உருவாக்கி, இயற்கையோடு வாழ்வை மேற்கொண்டதால் அவன் வாழ்வில் இயற்கை என்பது இன்றியமையாத ஒன்றாக மாறிவிட்டது (Subramanian, 2003). அவன் வாழ்க்கைக்குத் தேவையான அத்தனை உதாரணங்களையும் இயற்கையிடமிருந்தே பெற்றுக் கொண்டான். அந்த வகையில் 'தகடூர்' தந்த தமிழ்ச் செவ்வியில் இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள உவமைகள் இங்கே வகைப்படுத்தப்பட்டுள்ளன.

## குறுந்தொகை

"கடும்பகட்டு யானை நெடுந்தேர் அஞ்சி

கொண்முனை இரவு ஊர்போல" - 91

"புல்லென்காராம்பூக்கெழுபெருஞ்சினை

பென்சில்எருத்தின் தோன்றும்"-183

## நற்றிணை

"முரிந்தசிலம்பின் எரிந்த வள்ளியின்

புனர் அழிந்து ஒலிவரும் தாழ் இருங் கூந்தல்" -295

"கரைபொருதுஇழிதரும்கான்யாற்றுஇகுகரை

வேர்கிளர் பாத்து அம்தளிர் போல" - 381

## அகநானூறு

"இலைஇலமலர்ந்த புகையில்இலவம்

கலிகொள்ஆயம்மலிபுதொகுபு எடுத்த

அம்சுடர்நெடுங்கொடுபொறப்பத்தோன்றி"- 11

"வெள்ளி வீதியைப் போல நன்றும்" - 147

"பொறையன் கடுங்கோப் பாடிச்சென்ற

குறைபோர் கொள்கலம் போல" - 142

## புறநானூறு

"கோட்டிடை வைத்த கவளம்போல" - 101

"ஊர்க்குறு மாக்கள் வெண்கோடுகழாஅலின்

நீர்த்துறை படியும்பெருங்களிறுபோல" -94

## உள்ளுறை உவமம்

உள்ளுறை என்பது ஒன்றை உணர்த்துவதற்குவேறொன்றை உள்ளுறைத்துக் கூறுவதாகும். இது ஐந்து நிலைகளில் காணப்படுகின்றது. உடனுறை, உவமம், சுட்டு, நகை, சிறப்பு ஆகிய ஐந்தின் வழியாக உள்ளுறை அமையும்.

"உடனுறை உவமமும் சுட்டு நகை சிறப்பு எனக்

கெடலரும்மரபின் உள்ளுறை ஐந்து" - தொல்காப்பியம்

அகத்திணைகளில் எண்ணங்களை வெளிப்படுத்துவதற்கு புலவர்கள் பயன்படுத்திய ஓர்உத்தி முறையை உள்ளுறை உவமம் ஆகும்.

தான் சொல்ல நினைக்கும் பொருளின் பண்புகளுக்குரிய வேறொன்றை நிலைக்களனாகச் செய்யுளில் படைப்பது உள்ளுறை உவமம் என்றும் சொல்லலாம்.

"உள்ளுறை தெய்வம் ஒழிந்த நிழன்எனக்

கொள்ளும் என்ப குறியறிந்தோரே" -தொல்காப்பியம்

"உள்ளுறுத்து இதனோடு ஒத்துப் பொருள் முடிகென

உள்ளுறுத்து உரைப்பது உள்ளுறை உவமம்"- தொல்காப்பியம்

இவ்வுள்ளுறை உவமும் ஔவையார் பாடல்களில் நிரம்பவே உள்ளன.

## நற்றிணை

"அரவுத்தலை பனிப்பப்

படுபவை உருமின் உடற்றுகுரல்

நடுநாள் யாமத்து தமியங்கேட்டே"- 129

"வாளை வாளின் பிறழநாளும்

பொய்கை நீர்நாய் வைகுது யில்ஏற்கும்"

## அகநானூறு

“பொறிகிளர் உழுவெப்போல் வாய்ஏற்றை
அறுகோட்டு உழைமான் ஆண்குரல் ஓர்க்கும்
நெறிபடு கவலை நிரம்பா நீளிடை”- 147

“பகுவாய் வராஅற்பல்வரி இரும்போத்து
கொடுவாய் இரும்பின் கோள்இரை நூற்றி
ஆம்பல் மெல்அடை இழிப குவளை
கூம்புவிடுபல்மலர்சிதையப்பாய்ந்து
கயம் உழக்கும் பூக்கேழ் ஊர”-36

## முடிவுரை

ஒரு புலவர் பல்வேறு கதைப் பாத்திரங்களை மனதில் நிறுத்தி, அந்தந்தப் பாத்திரங்கள் நேரடியாகப் பேசுவதைப் போலவே அமைந்திருக்கும் கூற்று வழி கதைகளும், உவமை, உள்ளுறை உவமம் ஆகிய உத்திமுறைகளும் தமிழ்ச் செவ்வியல் இலக்கியங்களில் காணக்கிடைக்கும் கதைமரபுகளாகும். இவை தகடூர் தந்த செவ்வியல் இலக்கியங்கலான ஔவையார் பாடல்களில் நிரம்பவே காணப்படுகின்றன என்பதை இதன்வழி அறியலாம்.

## References

Balasundaram, S. (2012) Tholkappiyam, Periyar University, Salem, India

Subramanian, S.V. (2003) Sanga Ilakkiyam Pathupattu - Moolamum Uraiyum, Koviloor Madalayam, Koviloor, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License